# நான் குழந்தை இயேசு!

*டாக்டர் திருமதி லில்லியன் ஸ்டான்லி*

**அ**ப்பாவின் கவலை தோய்ந்த முகம் பூலோகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். புறாக்களையும், ஆடுமாடுகளையும், ஏராளமான குருக்கள் வருடாவருடம் பலியிட்டுக் கொண்டிருந்தனர். பாவம், குற்றவுணர்வு, பலி என்ற முடிவில்லாத வட்டம் அது. அப்பாவின் சிந்தனையை என்னால் பார்க்க முடிந்தது - நாங்கள் பாசத்தோடு படைத்த அருமைப் பிள்ளைகளின் பாவங்களை ஆடு மாடுகளின் இரத்தம் எடுத்து விடுமோ? அவரது கண்களில் சொட்டிய வேதனையைக் கண்டு, சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரண பலிகளும் அவருக்கு விருப்பமாயில்லை என்று உணர்ந்தேன். குற்றமற்ற ஆட்டுக்குட்டி ஒன்றை நிரந்தர பலியாகக் கொடுத்தாலன்றி அவரது அருமைக் குழந்தைகள் நரகம் சென்றடைவரே! திடீரென்று எனக்கு உதயமானது! புத்தகச் சுருளில் எழுதப்பட்ட அந்த தேவ ஆட்டுக்குட்டி நானாக இருக்கலாமே! அப்பாவிடம் சொன்னேன், “தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது” (எபி 10:1-10). அவரது முகம் ஜொலித்தது.

உணர்ச்சிவசப்பட்டு நான் எடுத்த தீர்மானம் அல்ல இது. எனக்குள்ளாக நான் சென்று எடுத்த ஆழ்ந்த தீர்மானமிது. பின்பு நான் திரும்பிப் பார்க்கவே இல்லை. அதைச் சொல்லும்போது அதன் விலைக்கிரயத்தை நான் யோசிக்காமலில்லை. சுலபமில்லைதான். ஆனால் மானிடரை அப்பா எவ்வளவு நேசித்தாரோ, நானும் அப்படியே நேசித்தேன் (எபி 10:5-7). என் உடலை பலிகொடுப்பதினால் மக்கள் பரிசுத்தமாக்கப்பட்டு பரலோகத்திற்கு வந்து நிரந்தரமாய் எங்களோடுகூட வாழமுடியுமானால், தாரளமாய் என்னை அர்ப்பணிக்க மனதோடிருந்தேன் (வச 10). தீர்மானம் உருவெடுத்து கிறிஸ்து ஜெயந்தி ஆனது.

என்னுடைய குழந்தைப் பருவத்தை மூன்றாகப் பிரித்திருக்கிறேன்-

**1. கருவறைக்கு முன்னே தியாகம்:** அருமை சகோதர சகோதரிகளே என்னைப் பின்பற்றுங்கள் என்று பலமுறைச் சொல்லியிருப்பதுபோல இதிலும் என்னைப் பின்பற்றுங்கள் - என்னுடைய தியாகத்தினால் நீங்கள் பெற்றுக்கொண்டதுபோல உங்கள் சகோதர சகோதரிகளும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமானால் இதுவே இரகசியம். பிறர் வாழ வேண்டுமானால் யாரோ ஒருவர் சாக வேண்டும். பணத்தைக் குறித்தோ, வேலையை விடுவதைக் குறித்தோ சொல்லவில்லை. உங்கள் நெஞ்சை நிறைத்திருக்கும் பேராவல்களின் பகுதியிலே ஒரு பரீட்சையை அனுபவிப்பீர்கள். என் பக்கமாய் உங்களைச் சேர்த்துக்கொள்ள நான் செய்த தியாகத்திலும் குறைவாய் இருக்க முடியாது. மோட்சத்தில் என் உயர் நிலையை உதறித் தள்ளி, என்னையே பூஜ்யமாக்கி, எல்லாருக்கும் வேலைக்காரனாகி உங்கள் நிலைக்கு என்னை இறக்கி சிலுவை மரணத்திற்குக் கீழ்ப்படிந்து என்னைத் தாழ்த்தினேன்! (பிலி 2:6-8). பிறரை என்னிடம் நடத்த விரும்பினீர்களானால் இந்த மனமே உங்களுக்கு இருக்கட்டும். பவுல் ‘‘எல்லாவற்றையும் நஷ்டமென்று” எண்ணவில்லையா? (3:8).

இந்த பாவ உலகில் பிறப்பேன் என்று அறிந்திருந்தேன். கொண்டாட்டமோ, தொட்டிலோ, அழகிய உடைகளோ, விளையாட்டு சாமான்களோ கிடையாது. அரண்மனையில் பிறந்து மெத்தையில் கிடத்தப்படுவேன், மாட்டுக் கொட்டகையில் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தப்படுவேன். அநாதி தீர்மானத்தில் அதுவும் ஒரு பகுதி.

நீங்கள் உயர்குலமாயிருக்கலாம் அதைத் தூக்கி எறியுங்கள். தோலை உரித்துவிட்டால் எல்லாரும் ஒன்றுதான். என்னை அறியாதவர்களை எட்டிப் பிடிக்க நீங்கள் சாதா மனிதனாக வேண்டும். குனியுங்கள், தாழ்மைப்படுங்கள், என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். கதவடைக்கப்படும்போது இகழ்ச்

சியை ஏற்றுக்கொள்ளப் படியுங்கள். தயக்கம் வேண்டாம். ஒருகதவு விடாமல் தட்டுங்கள். ஆன்மீக மந்தம் வந்தால் தொலைந்தீர்கள். விரட்டிவிடு வரோ என்ற பயத்தை மேற்கொள்ள தைரியம் வேண்டும். பொருளாதார ஏணியின் உச்சத்தில் இருப்பவர்களின் கதவைத் தட்ட முகம் சுளிக் கிறீர்களோ? ஏன்? கேவலமாய் நடத்தப்பட விருப்ப மில்லை, அதானே? என்னுடைய பெயருக்காக அவ மானப்படுவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடி யால் மகிழ்வுடன் அப்போஸ்தலர்கள் ஆலோசனை சங்கத்தை விட்டு வெளியேறினார்கள் (அப் 5:4 ; 13:51,52).

பேன்ட், ஷர்ட், பட்டுப் புடவை மக்கள் மத்தியிலும் கடவுளைத் தேடித் திரியும் மக்கள் உண்டென்று அறிவீர்களா? போங்கள். நிராகரிக்கப்பட்டு விரட்டப் படுவீர்களானால் சந்தோப்படுங்கள். நான் அவமா னப்படுத்தப்பட்டு, துப்பப்பட்டு, கன்னத்தில் அறை யப்பட்டு உங்களுக்காக மறுகன்னத்தைக் காட்டி னேன். சத்தியத்தை அறியாதவர்களுக்காக நீங்கள் அதைச் செய்ய வேண்டாமோ? "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான்... அப்படியே உங் களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை எல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான்" (லூக் 14:27-33). 'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று உங்கள் புலவரில் ஒருவரும் சொல் லியிருக்கிறாரே! கிறிஸ்தற்ற நித்தியத்திற்குள் மூழ்கிக் கொண்டிருப்போருக்காக உங்கள் நெஞ்சு வலிக்குமானால் நீங்கள் கடைசி சொட்டு இரத்தம் வரை தியாகம் செய்யவேண்டும். "என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர் களாக்குவேன்" என்று நான் சொன்னதன் கருத்து இதுவே. மீன்களைக் கொண்டு வர, மீனவர் தம் உயிரையே வெறுத்துதான் போக வேண்டும். நற் செய்திக்காக கன்னத்தில் ஒரு அறையைத் தாங்கிக் கொள்ள முடியாவிட்டால் ஆத்துமாக்களுக்காக உயிரை பணயம் வைப்பதெப்படி? சகோதரிகளே, வேறு வழியில்லை என்றாலொழிய வேலை எடுக் காதீர்கள். தேவனை சேவிக்க உங்கள் வாழ்வை அற்பணம் செய்யுங்கள். ரூபாய் நோட்டு உங் களை ஆசை காட்டி இழுப்பானேன்.

இஸ்ரவேலின் தூசிப் படிந்த தெருக்களில் கிரா மம் கிராமமாக, ஊர் ஊராக, நகரம் நகரமாக சுற் றித் திரிந்தேன். செவிகொடுக்க மக்கள் கூடின இடங் களிலெல்லாம் அவர்களுக்குப் போதித்தேன். தேள்போல் கொட்டின அமில வார்த்தைகளை எதிரி கள் என்மேல் வீசினர். என்னைக் கொல்லவும் பார்த்தனர். மக்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் இருப்பதைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந் தேன். இன்றும் அதே நிலைதான். உங்கள் உள்ளம் நெகிழ்கிறதா?

''பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக் கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்க'' வேண்டும் (2 கொரி 5:15).

கிறிஸ்து ஜெயந்தி உங்களுக்கு தியாகத்தை நினைவூட்டுகிறதா? என்னுடைய பிற எல்லா ஆசைகளுக்கும் டாடா காட்டி என்னை அர்ப்பணித் தேன். நிலத்தில் கோதுமை மணியாய் விழுந்து செத்தேன். விதைக்கப்பட்ட விதை ஏராளமான பல னைத் தந்திருக்கிறது. உங்களைக் குறித்து என்ன?

**2. கருவறையில் தியானம்:** மரியாளின் கருவறை இருளில் ஒன்பது மாதங்கள் தனித் திருந்தேன். சுலபமாயில்லை. கைகள், கால்கள் முடங்கி வாளாவிருந்தேன். ஆனால் வசதிக்குக் குறை வில்லை. அப்பா எனக்கு உணவளிக்க வளர்ந்து வந்தேன். பொறுமை தேவையாயிருந்தது. எனக் கும் காலம் வரும் என்று காத்திருந்தேன். அதுவரை கடவுளை நம்பியிருக்க வேண்டியிருந்தது.

கைகள் கட்டப்பட்டு வல்லமையற்றவர்களாக உணருகிறீர்களா? அடைபட்டது போன்ற உணர்வா? இருளில் மூழ்கியிருக்கிறீர்களா? பொறுமை தேவை. உங்கள் நேரம் இன்னும் வரவில்லை. இது கர்த்தரை சார்ந்திருக்க வேண்டிய நேரம். நீங்கள் வளர்ந்து வர அருமையான இடத்தை அவர் ஆயத்தம் செய்ய வில்லையா? உங்கள் உடலையும் ஆத்துமாவை யும் அவர் போஷிக்கவில்லையா? பின் கவலை ஏன்? அவரே கதி என்றிருங்கள்.

எகிப்துக்கு வெளியே இஸ்ரவேலை நடத்திக் கொண்டுபோக தகுதிபெறும் முன்பாக மோசே நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் செலவழித்தார். கற்றுக்கொள்ளும் முன்பாக பலவற்றை கழற்றி எறியவேண்டியதாயிருந்தது. யோசேப்பு சகோதரால் வெறுக்கப்பட்டு, குழியில் எறியப்பட்டு, இஸ்மவேலருக்கு விற்கப்பட்டு, அடிமைச் சந்தையில் விலைபேசப்பட்டு, போத்திபாருக்கு வேலைக்காரனாகி, கற்பழிப்பு குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு, பின்பே ஜொலிக்கலானான். முயலை நரி துரத்துவதுபோல சவுலால் தாவீது துரத்தப்பட்டார். உயிர் ஊசலாடியது. இஸ்ரவேலின் சிங்காசனத்தில் உட்காருமுன்பாக குகைகளிலும் காடுகளிலும் பதுங்க வேண்டியிருந்தது. கர்த்தரால் வடிவமைக்கப்பட்டு பவுல் அரேபியாவில் அமர்ந்திருந்தார். இவர்கள் வழியைக் கற்று ஆவியை உறிஞ்சிக்கொள்ளுங்கள். முழுநேர ஊழியமாய் காலெடுத்து வைக்குமுன்பாக முப்பது ஆண்டுகள் வளர்ந்தேன். ஆனால் சோம்பலாயில்லை. திருவார்த்தையை செவ்வனே கற்று பிதாவோடு பேசிக்கொண்டிருந்தேன். அவை வீணடிக்கப்பட்ட வருடங்களல்ல. வருடா வருடம் எருசலேம் திருவிழாவிற்குச் சென்றேன். தச்சு வேலை கற்று தச்சனானேன். மேற்கூறப்பட்ட யாருமே சோம்பித் திரியவில்லை. நாங்கள் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் வளர்ந்து வந்தோம். இந்தக் கருவறை அனுபவம் எனக்கு முப்பது ஆண்டுகள் நீடித்தது. பின்பு துள்ளிச் செயல்பட ஆரம்பித்தேன்.

இந்நாட்களில் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். திருவசனத்தை தியானித்து தேவ சமுகத்தில் காத்திருப்பதன் மூலம் உங்கள் ஆன்மீகத் தசைகளை பலப்படுத்துங்கள். சோம்பலாயிராமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருங்கள். ஒரே நாளில் கனிந்த தேவ மனிதனாகிவிட முடியாது. “பெரிய” ஊழியனாக சிறிதாய்த் துவங்க வேண்டும். தீர்க்கதரிசியாகுமுன் எலிசா ஏர் ஓட்டிக்கொண்டிருந்தார். அரசனாகுமுன் தாவீது ஆயனாயிருந்தார். தேவனுக்கு முன் நிற்கும் முன்பாக பவுல் கமாலியேலின் பாதத்தில் உட்கார்ந்திருந்தார். நற்செய்தி அறிவிக்கத் தருணம் கிடைக்கும் போதெல்லாம் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ‘‘ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்” (ரோமர் 5:19).

கண்களிருந்தென்ன கைகால்கள் இருந்தென்ன என்று கருவறையில் குழந்தை நினைக்கிறது. ஆனால் வெளியுலகைக் கண்டவுடன் - ஆஹா! எத்தனை பெரிய உலகம். கண்கொள்ளாக் காட்சிகள்! நடக்க விஸ்தாரம்! செய்து முடிக்க எவ்வளவு வேலைகள்! சீக்கிரம் இப்படித்தான் உணருவீர்கள். இந்த நாட்கள் முடியும்போது கர்த்தர் உங்களைப் பயன்படுத்துவார். ஆயத்தமாயிருங்கள்.

**3. கருவறைக்குப் பின்னே திருச்சித்தம்:** உமது சித்தம் செய்ய வந்தேன் என்று தகப்பனிடம் சொன்னேன். அந்த வாக்கை நிறைவேற்றுவதே என் வாழ்வின் குறிக்கோளாயிற்று. பிறப்பிலிருந்து இறப்புவரை எண்ணமெல்லாம் அதுதான். உணவைக்கூட மறப்பேன் அதை மறக்க முடியாது. ‘‘நான் சாப்பிட நீங்கள் அறியாத ஒரு உணவு எனக்கு உண்டு... நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய உணவாயிருக்கிறது” (யோவா 4:32-34).

ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்ததுபோல இருளிலிருந்து வெளிவந்தேன். ஆனால் தொல்லையும் என்னைத் தொடர்ந்தது. வேதனையான பிறப்பு. ஓநாய் போல சாத்தான் என்னை விழுங்கக் காத்திருந்தான். ஏனெனில் நான் இறைச் சித்தம் செய்தால் அவனது அரசு தவிடுபொடியாகிவிடுமே. கரணம் தப்பினால் மரணம் என்ற நிலை. ஆனால் என்னைக் காப்பாற்ற அப்பா ஒரு படையையே அனுப்பிவிட்டார். சிறு யுத்தமல்ல, பெரும் போர், ஏனெனில் செயல்பட்ட மூளை சாத்தானல்லவா! ஏழு தலைகளையும், ஏழு கொம்புகளையும், தலைமேல் ஏழு கிரீடங்களையும் உடைய ஒரு பெரும் வலுசர்ப்பம், நான் பிறந்தவுடன் என்னை விழுங்கக் காத்திருந்தது. ஆனால் சரியான நேரத்தில் என் அப்பா என்னைக் காப்பாற்றினார். பிசாசு என்னப்பட்ட பழைய பாம்பாகிய சாத்தானே அது. மிகா

வேலும் அவனது தூதர்களும் வலுசர்ப்பத்தோடும் அதன் தூதர்களோடும் சண்டையிட்டுத் தோற்கடித் தனர். இந்தக் கொடுமையான அனுபவம் குழந் தையாகிய என்னை இளைக்கச் செய்தது. "இப் பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனு டைய அரசும், அவருடைய கிறிஸ்துவின் அதிகார மும் உண்டாயிருக்கிறது" என்று வானத்திலே ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன் (வெளி 12:1-10).

பட்டயம் எங்கள் தலைமேல் தொங்கினதால் அவசரமாக எகிப்திற்குத் தப்பியோடும் நிலை! மறுபடியும் தேவன் உதவினார். நான் அவனது தலையை நசுக்கப் போகிறேன் என்றறிந்ததால் பிசாசு என்னைக் கொல்லத் துரத்தினான். உங்கள் ஊழியத்தினால் சாத்தான் மின்னலைப்போல சாய் வதைக் கண்டு அகமகிழப் போகிறேன். பிசாசு உங் களைத் துரத்தும்போது உள்ளம் தொய்ந்து போகா தீர்கள். பாலைவனத்திலும் நீரோடைகள் உண்டு.

இறைச் சித்தம் செய்ய தீவிரமாயிருப்பீர்களா னால் சாத்தான் சுலபமாய் விடான். நானும் கடின சூழ்நிலைகளைச் சகித்தேன். சுயமாய் எதுவும் சாதிக்க முடியாத சக்தியற்ற, பலவீன குழந்தையா யிருந்தேன். ஆனால் என் தகப்பன் என் அருகி லேயே இருந்து என்னை நடத்தினார்.

தாவீது, "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக் குப் போதித்தருளும்..." என்று வேண்டினார் (சங் 143:10). ஆகவே கற்றுக்கொண்டார். அந்த தாகத் தோடு ஆண்டவரிடம் செல்வீர்களானால், அக மகிழ்வோடு அவர் சொல்வார்: "நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்களை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். வாரினா லும் கடிவாளத்தினாலும் கட்டப்பட்டாலொழிய உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண் டாம்'' (சங் 32:8,9). என்னுடைய சித்தத்திற்கு நேராக என் பிள்ளைகளை நடத்த எத்தனிக்கும் போது இதைத்தான் அனுபவிக்கிறேன். கழுதை யைப் போல முரண்டு பண்ணும்போது சாட்டையை எடுக்கத் தோன்றுகிறது. தாவீதைப் போல திருச்சித் தம் செய்ய ஆர்வம் இருக்குமானால் வழிநடத்து வது சுலபமாகுமே. இப்போதோ அவர்களை மூலைக்குத் தள்ளி தண்டித்து என் சித்தம் செய்ய கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டியதாயிருக் கிறது. கெத்சமனேயில் நானும் தடுமாறினேன் தான். ஆனால் திருக்குரலுக்கு ஒப்புக்கொடுத்த போது துன்பத்தின் வழியாய் மகிமையால் முடி சூட்டப்பட்டேன். ஆண்டவரைக் கேட்டு, உங்கள் விருப்பப்படி செய்யாதிருக்கக் கற்றுக்கொள்ளுங் கள். உங்களைவிடக் கடினமான சூழ்நிலைகளை தாவீது சந்தித்தாலும், "தன் காலத்திலே தேவனு டைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்த பின்பு நித்திரையடைந்தார்" (அப் 13:36). பவுலை என் தந்தை தமது திருஉள்ளத்தை அறியும்படி தெரிந்துகொண்டார் (22:14). அவரது திருவுள்ளத் தைப் புரிந்துகொண்டு அதன்படி செயல்படுவது அத்தியாவசியம்.

எத்தனையோ முரண்பாடுகள் வந்தாலும் நான் வாக்களித்தபடி தகப்பனின் சித்தம் செய்து, என் மரணத் தருவாயில், "முடிந்தது" என்று முற்றுப் புள்ளி வைத்தேன். உங்கள் மரணப் படுக்கையில் அப்படிச் சொல்ல முடியுமா? என் பிதாவையும் உங் களையும் நோக்கி, "தேவனே, உம்முடைய சித்தத் தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்று சொல் லுங்கள். அதுவே உங்கள் வாழ்க்கையின் திருப்பு முனை ஆகும்.

என்றுமுள்ள உடன்படிக்கையின் இரத்தத்தால், ஆடுகளின் பெரும் ஆயரான என்னை இறந் தோரிடமிருந்து எழுப்பியவர் சமாதானத்தின் தேவனே. அவர் தம் திருச்சித்தத்தை நீங்கள் நிறை வேற்றும்படி, எல்லா நன்மையும் செய்வதற்கு உங் களை ஆயத்தப்படுத்தி, என் வழியாகத் தமக்கு உகந்ததை நம்மில் செய்தருள்வாராக! அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக! ஆமென் (எபி 13:20,21). ■

(www.lilianstanley.com)